(ஆ) இத்திருக்கோயிலுக்குத் திருப்பணிக் குழு அமைத்து திருப்பணி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருமதி ஜெ. லோகாம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அய்யனார் பிடாரி கோயிலானது ரொம்பவும் சீர்குலைந்த நிலைமையிலே உள்ளது. ஆகையினால் அமைச்சர் அவர்கள் பரிசீலனையில் உள்ளது என்று சொல்லியுள்ளார்கள். இருந்தாலும் எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் ? எவ்வளவு சீக்கிரமாக அதைச் செய்து கொடுக்க முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு பிடாரி அய்யனார் திருக்கோயிலின் ஆண்டு வருமானம் 1439 ரூபாய் மட்டுமே. எனவே, இந்தத் திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்ய திருப்பணிக் குழு விரைவில் அமைக்கப்பட்டு பொதுமக்களிடமிருந்தும், அரசு மானியமும் பெற்று விரைவில் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-10

திருமதி ஜெ. லோகாம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது இன்னும் பணக்கார கோவில் ஆகவில்லை. அதற்கு நிலம் இருக்கிறது, மழை பெய்யாத காரணத்தால் விவசாயம் விளையவில்லை. ஆகவே விவசாயம் இருந்தால்தானே நெல் விளைந்தால்தானே பணக்கார கோவில் ஆக முடியும். ஆகவே, பணக்காரக் கோவில் ஆக முடியாத காரணத்தால் அரசே எடுத்து அந்தக் கோவிலைக் கட்டித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 40, திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

40—

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவிலில் வசதியை மேம்படுத்துதல்

*38161—*திரு. ஆர். முருகையா பாண்டியன் :*

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1996 பிப்ரவரி 16

சிதம்பரனார் மாவட்டம், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் சண்முகர் விலாசத்திலிருந்து கோவில் உள்ளே செல்வதற்கான வரிசை வலக்கை பக்கமாகச் செல்வதை இடது கை பக்கமாக உள்ளே செல்வதற்கும் மூலவரை தரிசிக்க போடப்பட்டிருக்கும் பலகையை அப்புறப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயிலின் உட்பகுதியில் பொது தரிசனத்திற்குச் செல்லும் பக்தர்கள் வலது புறமாகவும், சிறப்பு தரிசனத்திற்குச் செல்லும் பக்தர்கள் இடது புறமாகவும் செல்வதால், சிரமமில்லாமலும் வசதியாகவும் முருகப் பெருமானை அவர்கள் தரிசனம் செய்ய முடிகிறது. எனவே தற்போது நடைமுறையில் உள்ள இவ்வரிசை முறையினை மாற்றத் தேவையில்லை எனக் கருதுகிறோம். அபிஷேகம் மற்றும் தீபாராதனை காலங்களில் முன் பக்கம் அமர்ந்து மற்றும் நின்று கொண்டு தரிசிக்கும் பக்தர்களால் சன்னதி மறைக்கப்படாமலிருக்கவும், பொது மக்கள் உயரமான இடத்தில் நின்று வசதியாக தரிசனம் செய்யவும் இந்த பலகை அமைக்கப்பட்டுள்ளதால் இப்பலகையை அப்புறப்படுத்தும் அவசியம் ஏதும் இல்லை என்று கருதப்படுகிறது.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு திருச்செந்தூர் முருகனை தரிசனம் செய்ய பிரசன்ன வாசலில் இருந்து சண்முகர் விலாசத்திற்கு நுழையும்போது வலது புறமாகச் சென்று தரிசனம் செய்யும்போது சண்முகருக்கு முதுகுப்புறத்தைக் காட்டிக் கொண்டு வழிபடுவது சரியில்லாததுபோல் எனக்குத் தெரிகிறது. எனவே, வலது புறமாகச் செல்வதை உள்ளே நுழைந்தவுடன் இடது புறமாக அதாவது சிறப்பு வழிப்பாட்டுக்குச் செல்லும் வழியையொட்டி ஒரு வரிசையை உருவாக்கி சாஸ்திர வழிபாட்டுக்கு நெறிமுறைகள் பிசகாதவாறு சீர் செய்யவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்கும் இந்த நேரத்தில், தமிழ்நாட்டிலுள்ள ஆலயங்கள் அனைத்திலும் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பல நல்ல காரியங்களைச் செய்கின்ற இந்த நேரத்தில், இந்தத் திருச்செந்தூர் முருகனை தரிசிக்கின்ற நேரத்தில், அங்கே கம்பி வேலிக்குள் அமைக்கப்பட்டிருக்கின்ற பலகையில் பக்தர்கள் எல்லாம் அதிலே ஏறி நின்று முருகனை தரிசிக்கின்ற நேரத்தில் பின்னால் நிற்கின்ற பக்தர்கள் முருகனைத் தரிசனம் செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே,

அந்தப் பலகையை மட்டும் நீங்கள் அப்புறப்படுத்தி இதை ஒழுங்கு படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பலகையைப் பற்றி கூறினார்கள். பலகையின் முன்புதான் நின்று பக்தர்கள் தரிசனம் செய்து கொண்டிருக்கிறார்கள். பலகைக்குப் பின்னாடி பக்தர்கள் வருவது இல்லை. எனவே, பொதுமக்களின் நலனை முன்னிட்டுத்தான் இந்தப் பலகை போடப்பட்டுள்ளது அதுபோல பொதுமக்களிடமிருந்து இதை மாற்றவேண்டும் என்றோ, இந்த வரிசையை மாற்றி அமைக்க வேண்டும் என்றோ, எந்த ஒரு கோரிக்கையும் வராத காரணத்தால் சிறப்பாக இந்த முறை செயல்படுகிறது. எனவே, இதையே தொடர்ந்து செய்யலாம் என்று கருதப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 24, மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளுக்கிணங்க திரும்ப எடுக்கப்படுகிறது. திரு. ஆ. கு. சீனிவாசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

24--

சார் பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

*38717--திரு. ஆ.கு. சீனிவாசன்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா----

(அ) பெரணமல்லூர் தொகுதியில் தேசூர் பேரூராட்சியில் சார் பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பெரணமல்லூர் தொகுதியில் தேசூர் பேரூராட்சியில் சார் பதிவாளர் அலுவலகம் இப்போது இருக்கிறது. அது வாடகைக் கட்டிடத்தில் இருக்கிறது. அதற்கு கட்டிடம் கட்டப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். கட்டிடம் கட்டுவதற்கு இந்த ஆண்டு நிதி ஒதுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.